# தகவல் தொழில்நுட்பப் பணியாளர்கள் பிரிவு

*மார்ச்* 2020

திபி 2051 . மலர் 2 . இதழ் 3



# பதிப்புரை

## இவ்விதழில்

1. வேளாண்மை
2. நான் ஒரு தமிழ் தேசியன்
3. மக்கள் களம்

நாம் தமிழர் தகவல் தொழில்நுட்பப் பாசறையின் இரண்டாவது ஆண்டில் சிறப்பாக நுழைந்துள்ளது. மேலும், அனைத்துத் தொழில் நுட்பனர்களுக்கான தளமாக விரிவடைய இருக்கிறது. இந்நேரத்தில் புதிய பொறுப்பாளர்களுக்கு ஆசிரியர் குழு தன் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

பெண் விடுதலை இல்லையேல் மண் விடுதலை இல்லை என்ற நோக்குடன் நாம் தமிழர் செயல்பட்டு வருவது நாம் அறிந்தது. பெண்களுக்கு, ஒவ்வொரு தேர்தலிலும் அவர்கள் உரிமைக்குரிய 50% இடங்களை அளித்து, நீதியை நிலைநாட்டி வருகிறது. இதில் நாம் செல்ல வேண்டிய தூரமும் நிறைய உள்ளது.

இலக்கு தூரமில்லை.

மகளிர் தின நல்வாழ்த்துகள்!

ஆசிரியர் குழு

> “எமது போராட்டத்தின் வலிமை எமது போராளிகளின் நெஞ்சுரத்திலிருந்தே பிறக்கின்றது."
>
> - தலைவர் பிரபாகரன்

தமிழகத்தின் ஒட்டுமொத்த உற்பத்தியில் வேளாண்மை தொடர்ச்சியாக சரிவு பெற்றுக் கொண்டே வந்திருக்கிறது. கிராமப்புற பொருளாதாரத்தை மீட்க வேளாண் மீட்பு மிகவும் அவசியம். அதை உணர்ந்துதான் நாம் தமிழர், வேளாண்மையில் முக்கிய கவனம் செலுத்தி வருகிறது. அதை எவ்வாறு செயல்படுத்தலாம் என சிறிது பார்ப்போம்.

**கூட்டுப்பண்ணை**

தமிழகத்தில் மொத்த தரிசு நிலங்கள் அளவு மட்டும் 30.04 இலட்சம் ஹெக்டேர் ( 2012 - 2013 கணக்கின்படி ). நீர் இல்லாமை போன்றவற்றின் காரணமாக இவற்றில் இப்போது பயிரிடப்படுவதில்லை. இவற்றின் அளவு வருடத்திற்கு வருடம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இதனை அரசு குத்தகைக்கு எடுத்து, சொட்டு நீர் பாசனம் செய்து, பழ மரங்கள் போன்றவற்றை வளர்க்க முடியும். இதன் மூலம் ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை கொடுக்க முடியும்.

தமிழகத்தில் மொத்த விவசாயப் பரப்பை கிட்டத்தட்ட 60% இது கூட்டும். இதனால் மொத்த உற்பத்தி பல மடங்கு அதிகரிக்கும்.

இவ்வாறு மாற்ற ஹெக்டேருக்கு 100,000 ரூபாய் என்று வைக்கும்போது, மொத்தம் ஆகும் தொகை, 30000 கோடி. ஐந்து வருடத் திட்டமாகப் பிரித்தால் ஆண்டு முதலீடு 6000 கோடி. இது தமிழக மொத்த பட்ஜெட்டில் 3% மட்டுமே.

**Table No. 4.4 Land use pattern in Tamil Nadu (Lakh Hectares)**

| Category | 2010-11 | 2011-12 | 2012-13 |
|---|---|---|---|
| 1. Fallows (Current + Others) | 25.95 | 25.61 | 30.04 |
| 2. Area sown: | | | |
| a. Net | 49.54 | 49.86 | 45.44 |
| b. Gross | 57.53 | 58.90 | 51.40 |
| 3. Area Irrigated: | | | |
| a. Net | 29.12 | 29.64 | 26.43 |
| b. Gross | 33.48 | 35.19 | 29.91 |

*Source: Department of Economics and Statistics, Chennai-6.*

ஐந்து வருடத்திற்குப் பிறகு மரங்கள் பலன் கொடுக்கத் துவங்கும்போது ஆண்டுக்கு 30,000 கோடி ( 30 இலட்சம் ஹெக்டர் X ஹெக்டேருக்கு வருடத்திற்கு 10 மெட்ரிக் டன் X ரூ 10 கிலோவிற்கு ) குறைந்தபட்சம் உற்பத்தி கிடைக்கும். மேலும் சுற்றுச்சூழலும் மேம்படும்.

இதன் மூலம் ஏறக்குறைய 10 இலட்சம் பேருக்கு உழவை அரசு வேலையாக நேரடியாக அளிக்க முடியும். மேலும், பழங்களிலிருந்து சாறு தயாரித்தல், விற்பனை, பிற மூலமும் 10 இலட்சம் வேலைவாய்ப்புகள் மறைமுகமாக கிடைக்கும்.

**உற்பத்திப் பெருக்கம்**

தமிழகத்தில் இரண்டு போகம் விவசாயம் செய்யும் வேளாண் நில அளவு வெறும் 13% மட்டுமே. முக்கியமான காரணம் நீர்.

சொட்டு நீர் பாசனம் மூலம் 50 - 60% நீர் சேமிக்க முடியும். சொட்டு நீர் பாசனத்தை விரிவுபடுத்துவதன் மூலம் உற்பத்தியைப் பெருக்க முடியும்.

தமிழகத்தில் உள்ள வேளாண் நிலங்களில் 55% ( 16 இலட்சம் ஹெக்டேர் ) கிணற்றினால் மின் மோட்டார் மூலம் பாசன வசதிப் பெறுபவை. இவற்றை எளிதாக, சொட்டுநீர் பாசானத்திற்கு மாற்ற முடியும். ஒரே வருடத்தில் எளிதாக, உற்பத்தியை இரட்டிப்பாக்க முடியும். விவசாயகளின் வருமானத்தையும் இரட்டிப்பாக்க முடியும்.

| S.No. | Sources | Net area irrigated ( in ha) | | | |
|---|---|---|---|---|---|
| | | 09-10 | | 08-09 | |
| | | Area | % | Area | % |
| 1 | CANALS (including System tanks) | 757090 | 26.4 | 765527 | 26.1 |
| 2 | TANKS | 503491 | 17.6 | 540281 | 18.4 |
| 3 | WELLS | 1593968 | 55.7 | 1614082 | 55.1 |
| | a. Tube wells | 391107 | 13.7 | 387074 | 13.2 |
| | b. Open wells | 1202861 | 42.0 | 1227008 | 41.9 |
| 4 | OTHERS | 9317 | 0.3 | 11223 | 0.4 |
| | **TOTAL** | **2863866** | **100** | **2931113** | **100** |

தமிழகத்தின் ஒரு வருடத்தைய அரிசித் தேவை 9 இலட்சம் டன்கள். ஆனால், உற்பத்தி 6 இலட்சம் டன்கள் மட்டுமே. மீதி மற்ற மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது.

எனவே, உணவு தற்சார்பைப் பெற இது மிகவும் முக்கியமாகும்.
நிலத்தடி நீர் பாசனப் பரப்புகளை முழுமையாக சொட்டுநீர் பாசனத்திற்குக் கொண்டுவர,

**16 இலட்சம் ஹெக்டேர் X 1 இலட்சம் = 16000 கோடி**

இதற்காகும் ஒட்டுமொத்த செலவு 16000 கோடி மட்டுமே. 5 வருடங்களில், வருடத்திற்கு 3200 கோடியாக செயல்படுத்தலாம்.

இது தமிழக நிதி பட்ஜெட்டில் 1.6% மட்டுமே.

சொட்டு நீர் பாசன பயிற்சி மற்றும் பராமரிப்பிற்கு வட்டத்திற்கு 100 பேராக 50,000 இளைஞர்களுக்கு அரசுப் பணி கிடைக்கும்

நிலத்தடி நீர் பாசனப் பரப்புகளை சொட்டு நீருக்கு மாற்றுவது, நிலத்தடி நீர் சுரண்டலைத் தடுக்கவும் உதவும்.



# நான் ஒரு தமிழ் தேசியன்

சமகால அரசியல் சூழலில் தன்னை ஒரு தமிழ்தேசியன் என்று செருக்குடன் சொல்லும் உங்களை போன்ற பலரில் நானும் ஒருவன்.

இந்த பாதையை நான் தொடர எது என்னை தூண்டியது, எது என்னை வழி நடத்தியது என்பது உங்களிடமும் பகிர எழுதுகிறேன்.

2015 காலக்கட்டங்களில் நானும் ஒரு சராசரி இளைஞனாக முகநூலை பொழுது போக்கிற்காகவும், புலனதை(WhatsApp) பயன்படுத்தி கொண்டு இருந்தவன். ஆங்கிலம் தான் அறிவு, தமிழ் வெறும் ஒரு மொழி மட்டுமே என்ற சிந்தனையும். இஸ்லாமியர் பெரும்பாலும் தீவிரவாதி, இந்தியா இந்துக்களின் நாடு என்ற அறிவையும் கொண்டு ஒரு சாதாரண திராவிட குடும்ப பின்னனியில் வாழ்ந்து வந்தேன்.

ஒரு நாள் வலையோலியில் தற்செயலாக அண்ணன் துருவன் செல்வமணி அவர்களின் காணொளியை காண நேர்ந்தது. அந்த காணொளியில் அண்ணன் துருவன் செல்வமணி 'திராவிட போர்வாள்' ஸ்டாலினை வெளுத்து வாங்கி கொண்டு இருந்தார். அந்த நேரத்தில் யாரடா இவன் எங்கள் திராவிட இளவரசனை ஓரண்டை இழுப்பது என்று துருவன் அண்ணனை பற்றி தேட ஆரம்பித்தேன் அவரின் பல காணொளிகளை கண்டேன். அப்போது தான் அவர் நாம் தமிழர் கட்சியை சேர்ந்தவர் என்று தெரிந்தது. சரி என்று கட்சியின் தலைவர் யார், அவர் என்ன பேசி இருக்கிறார் என்று பார்க்க தொடங்கினேன். இறுதியில் தெரிந்தது துருவனின் வால்வீச்சு பேச்சுக்கு, இனமான தமிழன் சீமான் தான் காரணம் என்று. தொடர்ந்து சீமானின் காணொளிகளை பார்க்க ஆரம்பித்தேன்.

என்னை போன்ற 90s பிறந்த பெரும்பாலானோர் தெரிஞ்ச அரசியல் மேடை என்பது திராவிட மேடைகளே.

திமுக, அதிமுகவின் திருட்டுத்தனத்தை சொல்லும், அதிமுக, திமுகவின் பொறுக்கித்தனத்தை சொல்லும். மாறி மாறி உண்மை பொது மேடையில் சொல்லுவார்கள் ஆனாலும் என் மக்கள் ( என் குடும்பம் உட்பட) அவர்களுக்கே வாக்களிப்பார்கள்.

ஆனால் நாம் தமிழர் கட்சி மேடையில் " அரசியல் தான் வாழ்வாதாரத்தின் அடிப்படை" என்ற உண்மையை உணர ஆரம்பித்தேன்.

தினமும் நாம் தமிழர் காணொளிகளை பார்க்க ஆரம்பித்தேன், அப்போது அண்ணன் அறிவுசெல்வன் என்ற ராஜிவ்காந்தி பேச்சை கேட்க முடிந்தது. அரசியல் மேடையில் அதிகாரத்தின் தேவையை பேசினார், இந்திய அரசியல் அமைப்பு சட்டங்களை பற்றி பேசினார். நான் ஏன் ஹிந்துவாக்காப்பட்டென், இந்த சட்டம் எனக்கு என்ன உரிமையை கொடுத்தது என்று தம்பிகளுக்கு மீண்டும் மீண்டும் கற்று கொடுத்தார். மறுபுறம் எங்கள் பேராசிரியர் கல்யாணசுந்தரம் சைவத்தின், வைணவத்தின் மீதான தேடலை தூண்டினார். இவர்கள் மட்டும் இல்லை, எண்ணில் அடங்கா பல சீமான்களின் பேச்சுக்களை கேட்க ஆரம்பித்தேன். பேராவூரணி திலீபன், கல்வியாளர் ஹுமாயூன், இடும்பவனம் கார்த்திக், சாட்டை துரைமுருகன் ஆரம்பித்து அக்கா காளியம்மாள் வரை என்னை போன்ற இளைஞர்களை நாம் தமிழரின் பாதையில் வழிநடத்தி சென்றார்கள்.

முகநூலை பொழுது போக்குக்காக பயன்படுத்தி வந்த நான், ஆங்கிலம் தான் அறிவு என்று எண்ணிய நான், இந்தியா இந்துக்களின் நாடு என்று நம்பிய நான். தமிழில் இன்று வலைப்பதிவு(blog) செய்ய ஆரம்பித்து, தமிழர்கள் ஹிந்துக்கள் இல்லை என்று எழுத தொடங்கியுள்ளேன் என்றால் ,

நாம் தமிழர் கட்சி தான் காரணம்.

- கலகக்காரன்

**மாற்றம் என்பது**
**சொல் அல்ல செயல்!**

## இரண்டாம் ஆண்டு துவக்க விழா, 16-02-2020

நாம் தமிழர் கட்சியின் தகவல் தொழில்நுட்பப் பணியாளர்கள் பாசறையின் இரண்டாம் ஆண்டு துவக்கத்தின் முதல் கலந்தாய்வு 16-02 -2020 தினம் தலைமை அலுவலகத்தில் சிறப்பாக நடந்து முடிந்தது.

நிகழ்விற்கு சிறப்பு அழைப்பாளராக வந்திருந்த நமது கட்சியின் தலைமை செய்தி தொடர்பாளர் அண்ணன் திரு. சே.பாக்கியராசன் அவர்கள் நமது பாசறையின் சென்ற ஆண்டிற்கான ஆண்டு மலர் - 2019 ஐ வெளியிட்டு சிறப்புரையாற்றினார்.

இன்றைய தினம் நமது பாசறையின் புதிய பொறுப்பாளர்கள் அறிமுக நிகழ்வும், எதிர்கால செயல்திட்ட விளக்கமும், உறுப்பினர்கள் கருத்துப்பரிமாற்றம் மற்றும் கலந்தாய்வும் மிகவும் ஆக்கபூர்வமாக நடந்து முடிந்தது.



வீழ்ந்துவிடா வீரம்!　　　　　　　　　　　　　　　　　மண்டியிடா மானம்!

# நாம் தமிழர் கட்சி



பதிவு எண்: 56/48/2013

க.எண்: 2020020013
நாள்: 03.02.2020

அறிவிப்பு:

## தகவல் தொழில் நுட்பப் பணியாளர்கள் பாசறை

| | | | | |
|---|---|---|---|---|
| தலைவர் | – | சிவசங்கரி | – | 00322367070 |
| துணைத் தலைவர் | – | திருநாவுக்கரசு | – | 26523852553 |
| துணைத் தலைவர் | – | சஞ்சய் | – | 08399431841 |
| செயலாளர் | – | மதுசூதனன் | – | 30357515104 |
| இணைச் செயலாளர் | – | அருள் | – | 00323309010 |
| துணைச் செயலாளர் | – | தேசியராஜ் | – | 24506815976 |
| பொருளாளர் | – | பிரபாகரன் | – | 10273212452 |
| செய்தித் தொடர்பாளர் | – | விக்னேஷ்வரன் | – | 14091036853 |

மேற்காண் அனைவரும் **நாம் தமிழர் கட்சி – தகவல் தொழில் நுட்பப் பணியாளர்கள் பாசறை பொறுப்பாளர்களாக** நியமிக்கப்படுகிறார்கள்.

இவர்கள் அனைவருக்கும், கட்சியின் அனைத்துநிலைப் பொறுப்பாளர்களும், அன்பு உறவுகள் அனைவரும் முழு ஒத்துழைப்பு நல்குமாறு அன்போடு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

புரட்சி வாழ்த்துகளுடன்,

நாம் தமிழர் கட்சி
எண்.8,
மருத்துவமனைச் சாலை
செந்தில் நகர், சென்னை 116

சீமான்
தலைமை ஒருங்கிணைப்பாளர்

1/1

இராவணன் குடில், கதவு எண்.8, மருத்துவமனை சாலை, செந்தில் நகர், போரூர், சென்னை – 600 116.
மின்னஞ்சல்: naamtamizhar@gmail.com / தொலைபேசி: +91 44 4380 4084

# தீர்மானங்கள்



1. நாம் தமிழர் கட்சி சார்பாக நிழல் நிதிநிலை அறிக்கை வருடாவருடம் வெளியிட ஆவண செய்ய வேண்டும்.
2. உள்ளூர் செய்தி ஊடகங்களின் வழியாக நமது கட்சியின் கொள்கைகளை பரப்ப ஆவண செய்ய வேண்டும்.
3. தகவல் தொடர்புத் துறையில் பணிபுரிய எத்தனிக்கும் மாணவர்களுக்கு மென்திறன்களில் )soft skills) பயிற்சி அளிக்க வேண்டும்.
4. வளரும் தகவல் தொழில் நுட்பத்தை முன்னிறுத்தி வகையில் கண்காட்சிகள் நடத்த வேண்டும்.
5. மாணவர்களின் திறனை வெளிக்கொணரும் வகையில் கண்காட்சிகள் நடத்தப்பட வேண்டும்.
6. நிரல் திருவிழா )Hackathon) நடத்த வேண்டும்.
7. விழிப்புணர்வு மிதிவண்டி பரப்புரைகள் மேற்கொள்ள வேண்டும்.
8. தற்குறிப்பு களஞ்சியம் )Repository of resumes).
9. தகவல் தொழில்நுட்பத் துறையில் இருந்து ஓய்வு பெற்றவர்களை பயன்படுத்துதல்.
10. தன்னியக்க சொல்லி இயந்திரம் (ATM) முழுவதும் தமிழில் இயங்க ஆவண செய்ய வேண்டும்.
11. வாக்குக்கு பணம் கொடுப்பது வாங்குவது/, சாதியின் தீமைகள் , மற்றும் இதர சமூகக் கேடுகளை விளக்கி காணொளிகள் உருவாக்க வேண்டும்.
12. சமூக வலைத்தளங்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றிய காணொளிகள் தமிழில் உருவாக்கிக் கொடுப்பது.
13. ஆடு கோழி வளர்த்தலின் தேவையை விளக்கி காணொளி உருவாக்குதல்.
14. நிறுவனங்களிலுள்ள வேலை வாய்ப்புகளை ITPW இணையதளத்தில் பதிவேற்றல்.
15. தமிழில் இணையதள முகவரிகளை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.
16. தமிழ் அர்ச்சகர்களை வெளி உலகுக்கு காட்டும் வகையில் அவர்களுக்கு வெளிச்சம் பாய்ச்சும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

17. அனைவரையும் தேர்தலில் பங்கெடுக்கச் செய்து அவர்களது வாக்குரிமையை நிறைவேற்றச் செய்ய பரப்புரைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். 0
18. தற்சார்பு பொருளாதாரத்தில் தகவல் தொழில்நுட்பத் துறையின் மூலம் எவ்வாறு அதிகப்படியான மக்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்க போகிறோம் என்பதை பறைசாற்றும் வகையில் ஆவணம் உருவாக்க வேண்டும்.
19. தகவல் தொழில்நுட்பதின் மூலம் எவ்வாறு வெளிப்படை தன்மையைக் கொண்டு வந்து ஊழலை ஒழிப்போம் என்பது பற்றிய ஆவணம் உருவாக்க வேண்டும்.
20. வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ப்பில் தகவல் தொழில் நுட்பத்தை எவ்வாறு உபயோக படுத்துவோம் என்பது பற்றிய ஆவணம் உருவாக்க வேண்டும்.
21. தமிழ் கையெழுத்து இயக்கம் நடத்த வேண்டும்.
22. சாதி ஒழிப்பு விழிப்புணர்வு பரப்புரை மேற்கொள்ள வேண்டும்.

உறுப்பினர்களின் கருத்துக்கள் மற்றும் செயல்திட்ட ஆலோசனைகளை விரிவாக அலசி ஆராய்ந்து முடிவு செய்யப்பட்ட செயல் திட்டமாக மாற்றி , ஒன்றன்பின் ஒன்றாக செயல்படுத்த ஆவண செய்வோம்.